செ.வெ.எண்:503 நாள்: 06.08.2020

# தமிழகம் முழுவதும் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் 1,18,000 படுக்கை வசதிகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

## மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (06.8.2020) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அரசு மருத்துவமனையினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். சுகாதாரத்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க தமிழகம் முழுவதும் கொரோனா நோய்தொற்றை தடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவ சிகிச்சைகள் குறித்தும் மற்றும் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

தமிழக அரசு தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் மட்டுமல்லாமல் மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் அனைத்து தாலுகா மருத்துவமனைகளிலும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்தி வருகிறது. இதன்படி தமிழகம் முழுவதும் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் 1,18,000 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் போதுமான படுக்கை வசதிகள் உள்ளிட்ட ஏனைய வசதிகளும் அனைத்து மருத்துவமனைகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பு பணிகளில் தமிழக அரசின் செயல்பாடு மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக திகழ்வதாக மத்திய அரசு பாராட்டு தெரிவித்துள்ளது. இதேபோன்று உலக சுகாதார நிறுவனமும் தமிழக அரசின் செயல்பாட்டை பாராட்டி உள்ளது. தமிழகத்தில் கொரோனா பரவல் கட்டுக்குள் உள்ளது.

மேலும் மழைக்காலங்களில் மழையினால் ஏற்படும் டெங்கு போன்ற நோய்கள் ஏற்படாமல் தடுக்கும் வகையில் தமிழக அரசு தேவையான அனைத்து தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.மரிய லூாயிஸ் பெக்கி ஹோம்ஸ், பொதுசுகாதார துணை இயக்குநர் மரு.பரணிதரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

---------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**